ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

07.10.2023

## தலைப்புச்செய்திகள்

1. ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா 25 தங்க பதக்கங்களுடன் 100 பதக்கங்களை வென்று சாதனைப் படைத்துள்ளது.

வீர வீராங்கனைகளின் சாதனைகளால் தேசம் பெருமிதம் கொள்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

2. மீன்வளத் தொழிலில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. பர்ஷோத்தம் ரூபலா கூறியிருக்கிறார்.

3 புதுதில்லியில் நடைபெற்ற 52-வது சிறுதானிய ஸி.எஸ்.டி. குழு கூட்டத்தில், சிறுதானிய உற்பத்தி பொருட்களுக்கான சரக்கு சேவை வரி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

4. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து உபரிநீர் வெளியேற்றப் படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□

### ஆசிய விளையாட்டு

சீன ஹாங்ஸூ ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா 25 தங்கம், 35 வெள்ளி, 40 வெண்கல பதக்கங்களுடன் 100 பதக்கங்களை வென்று சாதனைப் படைத்துள்ளது.

மகளிர் கபடி மற்றும் ஆடவர் வில்வித்தை போட்டியில் தங்கம், வெள்ளி பதக்கங்களை அபாரமாக வென்ற இந்தியா பதக்கப்பட்டியலில் 4-வது இடத்தில் நீடிக்கின்றது.

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவும், பிரதமர் திரு. நரேந்திமோடியும் இச்சாதனைக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தேசம் மகிழ்ச்சியில் திளைத்துள்ளதாக பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

வரும் 10-ம் தேதி ஆசிய போட்டிகளில் சாதனை படைத்தவர்களுடன் தாம் கலந்துரையாட இருப்பதாகவும் அவர் கூறினார்.

கபடி போட்டியில் வரலாற்று சாதனையை படைத்து 100-வது பதக்கத்தை நாட்டிற்கு பெற்றுத்தந்த இப்பெண்களின் வெற்றி, தன்னிகரற்ற எழுச்சியின் அடையாளம் என்றார்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக் சிங் தாகூரும், வீர வீராங்கனைகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

எதிர்கால விளையாட்டுத்துறைக்கு இது ஒரு மாபெரும் உத்வேகமாகும் என்று கூறிய அவர், 72 ஆண்டுகால ஆசிய விளையாட்டுகள் வரலாற்றில் தற்போது பல்வேறு உலக சாதனைகளை தகர்த்து, புதிய சாதனைகளை இந்தியா படைத்துள்ளது என்று மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

தங்கப்பதக்கத்திற்கான ஆடவர் கபடி போட்டியில் இன்று பிற்பகல் இந்தியா - ஈரானை எதிர்கொள்கிறது.

தங்கப்பதக்கத்திற்கான ஆடவர் இரட்டையர் பேட்மிட்டன் இறுதியாட்டத்தில் சாத்விக், சிராக்ஷெட்டி இணை - கொரிய இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

14-வது நாளான இன்று 100 பதக்கங்களை கடந்த இந்தியாவின் சாதனைகள் மேலும் தொடரும் என்று தேசம் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளது

□□□□□□□

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி ஜி-20 நாடுகளின் நாடாளுமன்ற தலைவர்கள் உச்சிமாநாட்டை புதுதில்லியில் வரும் 13-ம் தேதி தொடங்கி வைக்கிறார்.

உலகளாவிய நிர்வாகத்தில் நாடாளுமன்றத்தின் செயல்பாடுகள் மற்றும் ஒரே பூமி ! ஒரே குடும்பம் ! ஒரே எதிர்காலம் ! என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த உச்சிமாநாடு நடைபெறுகிறது.

பருவநிலை மாற்றம், சுகாதாரம், கல்வி, வேளாண்மை, எரிசக்தி தொடர்பான ஆக்கப்பூர்வமான விவாதங்களும் இந்த மாநாட்டில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதன் முன்னோட்டமாக நம் நாட்டின் தொன்மையான ஜனநாயக பாரம்பரியம் குறித்த மாநாடு வரும் 12 ஆம் தேதி நடைபெறுகிறது.

□□□□□□□

பிரதமர் - சுவாமிநாதன்

மறைந்த வேளாண் விஞ்ஞானி பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் விவசாய துறைக்கு ஆற்றியுள்ள அரும்பணிகள் பொன்னெழுத்துக்களில் என்றென்றும் பொறிக்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

எம்.எஸ். சுவாமிநாதனின் அரும்பெரும் சேவைகளை இன்று தமது சமூக வலைதளத்தில் நினைவுகூர்ந்த பிரதமர், 1960-ம் ஆண்டுகளில் நாட்டில் பஞ்சம் நிலவிய போது அன்னாரின் அர்ப்பணிப்பு மிகு சேவை வேளாண் துறையில் புதிய சகாப்தத்தை தோற்றுவித்ததாக குறிப்பிட்டார்.

விவசாயத்துறையிலும், கோதுமை உற்பத்தியிலும் அவரது முன்னோடி பணிகளை சுட்டிக்காட்டிய பிரதமர், இந்திய பசுமை புரட்சியின் தந்தை என்ற பெயர் அவருக்கு மிகவும பொருத்தமானதே என்றார்.

பசுமை புரட்சி தொடங்கிய 50 ஆண்டுகளுக்கு பின்னர் இந்திய வேளாண்மை நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறினாலும் அதற்கான அடித்தளத்தை உருவாக்கிய பேராசிரியரை நாடு ஒருபோதும் மறவாது என்றார்.

சிறுதானியங்களின் அவசியத்தை இன்று தேசம் பேசினாலும் 1990-ஆம் ஆண்டுகளிலேயே டாக்டர் எஸ். சுவாமிநாதன் இதற்கான விதைகளை தூவியதாக பிரதமர் சுட்டிக்காட்டினார்

பேராசிரியருடன் தமது கலந்துரையாடலை நினைவு கூர்ந்த பிரதமர் மண்வள அட்டை திட்டத்திற்கு அவர் அளித்த அரிய ஆலோசனைகளை பெருமையுடன் சுட்டிக்காட்டினார்.

வேளாண் விஞ்ஞானி என்று மக்கள் டாக்டர் சுவாமிநாதனை அழைத்தபோதிலும், உண்மையில் அவர் என்றென்றும் விவசாயிகளின் விஞ்ஞானியாக திகழ்ந்தவர் என்று பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

□□□□□□□

பர்ஷோத்தம் ரூபலா

மீன்வளத் தொழிலில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. பர்ஷோத்தம் ரூபலா கூறியிருக்கிறார்.

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டியில் சாகர் பரிக்ரமாவின் 9-வது கட்ட தமிழக கடல் பயணத்தை மீன்வளத்துறை இணை அமைச்சர் டாக்டர்.எல். முருகனுடன் இணைந்து இன்று துவக்கி வைத்தார்

தமிழ்நாட்டின் மீன்வளம், நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்காற்றுவதாக எடுத்துரைத்த அவர், மீனவர் நலன் கருதி மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதாக குறிப்பிட்டார்.

விண்ணப்பித்த மீனவர்களுக்கு வேளாண் கடன் அட்டைகள் வழங்கப்படும் என்று கூறியஅவர், தொண்டியில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை சமர்ப்பிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மீன்வலைகளையும் படகுகளையும் உருவாக்கும் பணியாளர்கள் விஸ்வகர்மா திட்டத்தை பயன்படுத்திக் கொள்ள அவர் அறிவுறுத்தினார்.

அலங்கார மீன் வளர்ப்பு, மீன்குஞ்சு வளர்ப்பு உள்ளிட்ட மீன்பிடி தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்குவதை அவர் சுட்டிக்காட்டினார்.

கடலோரத் தூய்மைப்பணிகளை மத்தியஅரசு மேற்கொண்டு வருவதாக கூறிய அவர், புதுக்கோட்டை மாவட்டம் ஜகதாபட்டினத்தில் சிறிய மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படும் என்றார்.

இரு அமைச்சர்களும் உள்ளூர் மீனவர்களுடன் கலந்துரையாடி அங்கு மேற்கொள்ளப்படும் திட்டங்களை கேட்டறிந்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், கடந்த 6 மாதங்களுக்கு முன்பு குஜராத்தில் தொடங்கிய சாகர் பரிக்கிரமா கடல் பயணத்திட்டம் மஹாராஷ்டிரா, கோவா, கர்நாடகா, கேரள மாநிலங்களைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் தற்போது மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

கடலோர மீனவர்களை சந்தித்து நரேந்திமோடி அரசின் திட்டங்களை அவர்களிடம் கொண்டு செல்ல இது ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி தந்திருப்பதாக அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

.... வாய்ஸ் .....

புதுக்கோட்டை மணமேல்குடியில் மீன் விவசாயிகளின் கூட்டுறவு உற்பத்தி கழகத்தையும் இருவரும் திறந்து வைத்தனர்.

நாகையில் செருகூர் முகத்துவாரத்தில் அமைய உள்ள மீன்பிடி தூண்டில் வளைவு திட்டம் குறித்து ஆலோசிக்கும் அமைச்சர்கள் அக்கரைப்பேட்டை மீன்பிடி துறைமுகத்தில் மீனவர்களை சந்திக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில், கிசான் கடன் அட்டை உள்ளிட்ட அரசின் நலத்திட்ட உதவிகளையும் மீனவர்களுக்கு வழங்குகின்றனர்.

சென்னையில் நாளைமறுநாள் சாகர் பரிக்கிரமாவின் பணிகள் நிறைவடைகின்றன.

□□□□□□

நிர்மலா சீத்தாராமன்

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் 52-வது சரக்கு சேவைவரி குழு கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி பங்கேற்ற இந்த கூட்டத்தில் தமிழ்நாட்டின் சார்பில் மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு உட்பட பல்வேறு மாநில நிதியமைச்சர்களும் இதில் பங்கேற்றுள்ளனர்.

இந்த கூட்டத்தில் சிறுதானிய மாவு உற்பத்தி பொருட்களின் வரியை தற்போதுள்ள 18 சதவிகிதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மின் வாகன பேட்டரிகளுக்கான ஜி.எஸ்.டி வரியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

ஆன்லைன் விளையாட்டுக்கள், குதிரைப்பந்தயம், சூதாட்டம் போன்றவற்றிற்கு 28 சதவிகித வரி விதிப்பது குறித்து இதில் ஆலோசிக்கப்படுகிறது

□□□□□□

முதலமைச்சர்

தமிழகத்தில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான உயர்நிலை குழுகூட்டம் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற்றது.

மாநில சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தலைமை செயலர் திரு. சிவதாஸ் மீனா உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

□□□□□□

உதகை

நீலகிரி மாவட்டத்தில் இரண்டாவது பருவ காலம் என அழைக்கப்படும் இளவேனிற் காலத்தை ஒட்டி பழமை வாய்ந்த கார்களின் அணிவகுப்பை ஓய்வு பெற்ற காவல் துறை தலைவர் திரு.விஜய்குமார் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இதில் இடம்பெற்ற ஆஸ்டின், ரைல், வோல்ஸ் வேகன், மோரீஸ், ஜாக்குவார், பிளைமவுத் உள்ளிட்ட 35 வகை கார்களும் ஜாவா, என்.'.பீல்டு உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களை ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கண்டுகளித்தனர்.

□□□□□□

நாகை – வாய்ஸ்

நாகை - இலங்கை இடையேயான முதலாவது பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை வரும் செவ்வாய்க்கிழமை தொடங்கவுள்ள நிலையில், சோதனை ஓட்டம் நாளை தொடங்குகிறது.

இதற்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து எமது நாகை செய்தியாளர் பேசுகையில்

.... வாய்ஸ் ....

□□□□□□

கிருஷ்ணகிரி – வாய்ஸ்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓறுர் வனக்கோட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் சிறுத்தை நடமாட்டம் காணப்படுவதால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு வனத்துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.... வாய்ஸ் ....

□□□□□□

செம்பரம்பாக்கம் ஏரி

சென்னைக்கு குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால், நாளை முதல் அணையிலிருந்து 100 கனஅடி உபரிநீர் வெளியேற்றப்பட உள்ளது.

எனவே சிறுகளத்தூர், காவனூர், குன்றத்தூர், திருமுடிவாக்கம், வழுதியம்பேடு, திருநீர்மலை, அடையாறு ஆறுகளின் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் கரையோர மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு காஞ்சிபுரம் மாவட்டம் ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி அறிவுறுத்தியுள்ளார்.

□□□□□□

இருவரி

ஐ.ஐ.டி. ஐ.ஐ.எம். உள்ளிட்ட மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட, பழங்குடியின மாணாக்கர் கல்வி உதவித் தொகை பெற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி.ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் வரும் 31-ம் தேதிக்குள் சொத்துவரி செலுத்தும் உரிமையாளர்களுக்கு 5 சதவிகித ஊக்கத்தொகை வழங்கப்படவுள்ளதாக மாநகராட்சி ஆணையர் திரு. பவன்குமார் தெரிவித்துள்ளார்.

ஈரோடு வீரப்பன் சத்திரத்தில் உள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வெள்ளாடு, செம்மறி ஆடு வளர்ப்பு குறித்த பயிற்சி வரும் 10, 11 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான சிறப்பு மருத்துவமுகாம் வரும் 11-ம் தேதி செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெறுகிறது.

□□□□□□

மாரத்தான்

தமிழகத்தில் திருச்சி, நாமக்கல், திருப்பத்தூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அறிஞர் அண்ணா மாரத்தான் போட்டிகள் இன்று நடைபெற்றன.

விழுப்புரத்தில் மாரத்தான் போட்டிகளை தொடங்கிவைத்த மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.பொன்முடி, இளைஞர்களை விளையாட்டுத்துறையில் ஊக்கப்படுத்தவும், உடல் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த மாரத்தான் போட்டிகள் நடத்தப்படுவதாக கூறினார்.

□□□□□□

வானிலை

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக கோவை, நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், சேலம், நாமக்கல், திருச்சி, கரூர், திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே புதுக்கோட்டை, கடலூர், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் அடுத்த சிலமணி நேரங்களில் இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

□□□□□□